RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s523

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் திராவிடக் கருத்தியல்

ஆ. அந்துவான் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா.

# Dravidian Ideology in Sangam Literature

A. Andhuvan [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: aanthuvansamed@gmail.com

Received: 16-07-2021
Revised: 20-06-2022
Accepted: 06-07-2022
Published: 25-08-2022

Check for updates

**ABSTRACT**

Tamil is the oldest. The Sangam literature provides a grammatical framework for recording the living traditions and sentiments of the people who spoke the ancient language as literature. This is not only an ancient book but also a mirror that depicts the life of the ancient Tamil people. Religion and God did not come and sit among the Tamil people during the Sangam period. It was during the Middle Ages that these entered. However, they did not determine the lives of the Tamil people. In the course of history, we can feel that these have entered not only Tamil society but all societies with the appearance of classes in history. Sangam literature is the golden literature of the life of a Tamilian. It is the duty of all of us to pass on to the next generation the treasure trove of literature, the treasure of culture, and the mine of history, which lies in the old Tamil manuscripts. The Sangam literature spelled out the concepts of education, self-respect, denial of caste, communism, etc.

**Keywords:** Dravidan, Sangam literature, Tamil people, Ancient Tamil

## முன்னுரை

தமிழ் பழமையானது. பழமையான மொழி பேசிய மக்களின் வாழ்க்கை மரபுகள், உணர்வுகள் போன்றவற்றை இலக்கியமாகப் பதிவு செய்வதற்கு ஒரு இலக்கண வரைமுறையை வகுத்துக் கொடுப்பது சங்க இலக்கியம். இது பழமையான நூல் மட்டுமல்லாது பழந்தமிழ் மக்களின் வாழ்வியலைக் குறிப்பிட்டுக் காட்டும் கண்ணாடி எனலாம். "சிறந்த கருத்துக்களின் பதிவே இலக்கியம்" என்பார் எமர்சன். சங்க நூல், வாழ்வைப் பற்றிக் கூறும் போதெல்லாம் இடையிடையே அரிய கருத்துக்களைப் புகுத்திச் செல்லும் கருத்துக் கருவூலமாகத் திகழ்கிறதெனின் அது மிகையாகாது.

## திராவிட வரலாறு

இலக்கியமும் திராவிடக் கருத்துக்களைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. ஆக, அக்காலக் கட்டத்தே வாழ்ந்த திராவிடர்களே, பிற்கால திராவிட இயக்கம் வேரூன்ற அடிகோலியவர்கள் எனலாம் (Muthukumar, 2010). இடைக் காலத்தே ஆரியர்கள் கைபர், போலன் கணவாய் வழியே வட இந்தியப் பகுதிகளுக்குள் ஊடுருவி திராவிடர் இடையே வந்து கலந்தனர் எனவும்,

"ஆரியர் அலறத் தாக்கி பேரிசை

தொன்று முதிர் வடவரை வணங்குவில் பொறித்து

வெம்சின வேந்தரை பிணித்தோன்

வஞ்சி அன்ன என்நலம் தந்து சென்மே"

மேற்கண்ட பாடலில் ஆரியர் அலறும்படி அவர்களைத் தாக்கி, இமயமலையின் மீது வளைவான வில்லைப் பொறித்த செய்தி கூறப்படுகிறது (Puliyur Kesigan, 1997). மேலும்,

"மாரி அம்பின் மழை தோல் சோழர்

குறும்பின் வல்லத்து புறமிளை

ஆரியர் படையின் உடைக என்

நேர்இறை முன்கை வீங்கிய வளையே"

இப்பாடலில் சோழனது வில் படை செறிந்து கிடக்கும் அரணை உடைய வல்லம் எனும் ஊருக்கு வெளியேயுள்ள காவல்காட்டில் வந்தடைந்த ஆரியரின் படையைத் தோற்கடித்த செய்தி சொல்லப்படுகிறது (Puliyur Kesigan, 1997). இன்னமும் பல சங்கப் பாடல்களில் வடக்கேயிருந்தவர்களை ஆரியர் எனக் குறிப்பிட்டதுடன் தமிழர்க்கும் ஆரியர்க்கும் இடையே தீராப்பகை காணப்பட்ட செய்திகள் விரவிக் கிடக்கின்றன (Puliyur Kesigan, 1997; Puliyur Kesigan, 2018; Puliyur Kesigan, 2013; Puliyur Kesigan, 2005). ஆரியர் அல்லாதாரைக் குறிக்க" திராவிடர்" என்ற சொல் பல்வேறு ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இடைக்காலத்தே பிராமணியத்தினை உயர்வாகக் கடைபிடிப்போரை "ஆரியர்கள்" என ரிக் வேதம் கூறுகிறது. பார்ப்பனரல்லாதோர் என்ற எதிர்மறைச் சொல்லுக்குப் பதிலாகத் "திராவிடர்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம் மாற்றத்தினை அயோத்தி தாசப் பண்டிதர், பெரியார் போன்றோர் தொடங்கினர்.

## திராவிடம்(அ) திராவிடர்

தற்போது திராவிடர் என்பது தமிழர் உள்ளிட்ட தென்னிந்தியர் என புவியியல் அடிப்படையிலும், மொழிக்குடும்ப அடிப்படையிலும், சமூக நீதிச் சொல் என்ற அடிப்படையிலும் பயன்படுத்தப்படினும் அதன் வேர் தமிழே. "திராவிடம்" என்பது தழிழே. திராவிடம் எனும் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் "கால்டுவெல்லே" ஆவார்.

## பகுத்தறிவு

சங்கப்பாடல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் பல விரவிக் கிடக்கக் காணலாம். சங்க இலக்கியங்களில் ஆரியர்கள் தாக்கத்தால் வேத சார்பும், தமிழர் தாக்கத்தால் தமிழ் மரபு சார் செய்திகளும் இடம் பெற்றுள்ளன. வேதம், புராணம் போன்ற அறிவுக்கு எட்டாத செய்திகளை, ஆரியச் சார்புடைய செய்திகளை அதிகமாகக் கொண்டுள்ளது. சங்கப் பாடல்கள் தமிழருக்கு, திராவிடர்க்கு உரியவை. ஆனால் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பிற்காலத்தே தொகுக்கப்படும் போது சேர்க்கப்பட்டவை.

செவ்வாய் கிரகத்திற்கு ஏவுகணை விடும் இக்காலத்தில் சொர்க்கம் இருக்கிறது, முப்பத்து முக்கோடி தேவர் இருக்கின்றனர் என்பதையெல்லாம் நம்பக் கூடியவர் இருக்கின்றனர் எனில் அதற்கு வேத இதிகாச புராணங்களே காரணம். ஆனால் விண்வெளியில் ஏன் பூமியை விட்டு சற்றே மேலே போனாலே காற்றும் ஈர்ப்பு விசையும் இல்லை. வெறும் சூனிய வெளி தான் என்பதை அடித்துக் கூறுகிறார்.

"செஞ்ஞாயிற்றுச் செலவும்

அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்

பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்

வளி திரி தரு திசையும்"

ஞாயிறு எனும் சூரியனின் பயணம், அதனைச் சூழ்ந்த மண்டலம், பிற கோள்கள், காற்றின் திசை, காற்றே இல்லாத ஆகாயம் என வரும் பாடலைப் பார்க்க சங்கத் திராவிடனின் பகுத்தறிவு தெரியவரும் (Puliyur kesigan, 1971).

மேலும் சங்கப் புலவரான குடபுலவியனார்,

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்"

என்று உணவின் இன்றியமையாமையை எடுத்துக் கூறி, உணவு உற்பத்தி, சேமிப்பு என்ற காலக்கட்டத்திற்கு வந்து சேர்ந்த காலம் சங்க காலம் (Puliyur kesigan, 1971). இதற்கு அடிப்படைத் தேவை நீர், நீரைக் காப்பது அரசனின் கடமை என அறிவுறுத்துகிறார் புலவர். நீர் வேண்டி யாகம் செய்யச் சொல்லவில்லை. மேலும் உறையூர் ஏணிச் சேரி முடமோசியார்,

"இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்

பிறரும் சான்றோர் சென்ற நெறி என

ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே."

எனும் பாடலில் ஆய் அண்டிரனின் கை வண்மை மறுமை நோக்கிச் செய்யப்பட்ட அறமன்று எனவும் மறுமை நோக்கிச் செய்யப்படும் ஈகை அறம், அறத்தை விலை கூறி விற்கும் வணிகத்தை ஒத்தது எனவும் கூறுகிறார் (Puliyur kesigan, 1971). மறுமையில் சொர்க்கம் கிடைக்க வேண்டும் என நீ எதிர்பார்த்துச் செய்யும் செயல் எதுவும் அறமாகாது என்பது எத்தகு பெரிய திராவிடப் பகுத்தறிவுச் சிந்தனை.

## சமத்துவம்(சாதி வேறுபாடின்மை)

மனித குலத்தில் பிறந்த அனைவரும் சமம் எனும் உயரிய சிந்தனை சங்ககால திராவிடனுக்குமிருந்ததால் தான் திராவிடச் சிந்தனையாகப் பிற்காலத்தே பரிணமித்தது. சாதியால், செல்வத்தால், அதிகாரத்தால், மேம்பட்டோர் எவரும் இல்லை என்பது பெரியாரின் கருத்து. சங்க இலக்கியமே திராவிடக் கொள்கைகளுக்கு முன்னோடி.

அந்தணர், அரசர், அளவர், இடையர், உப்புவணிகர், உழவர், எயிற்றியர், கடம்பர், கடைச்சியர், கம்மியர், களமர், கிணைஞர், கிணைமகள், குறவர், குறத்தியர், குறும்பர், கூத்தர், கொல்லர், பொருநர், பாணர், தேர்ப்பாகன், நுழையர், துடியர், புலையர், மறவர், மழவர், மோரியர், யவனர், வலைஞர், போன்றோர் சங்க காலத்தில் இருந்ததாக உ.வே.சா. குறிப்பிடுகிறார். இருப்பினும் அனைவரையும் சமமாகக் கருதும் நிலை இருந்ததை சங்கப்பாடல் பின்வருமாறு தெரிவிக்கிறது.

"தெண்கடல் வளாகம் பொதுமையின்றி

வெண்குடை நிழற்றிய வொருமையோர்க்கும்

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவர்க்கும்

உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலவே.”

அரசனாயினும் வேடனாயினும் உண்பது நாழி உணவு. உடுப்பது இரண்டு பகுதி ஆடைகள். மற்றவையெல்லாம் ஒன்றே என சமத்துவம் பாடுகிறது இப்பாடல் (Puliyur kesigan, 1971). ஆண், பெண் சமத்துவத்தின் வெளிப்பாடாக அதியன், ஔவையின் நட்பின் செழுமையை அப்பாடலை ஈடுபாட்டுடன் படிக்கும் பொழுது உணர்ந்து கொள்ள இயலும்.

சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் என்பது எப்போதும் இருந்திருக்கிறது. ஏற்றத்தாழ்வில்லாத சமூகம் எங்கும் இருந்ததில்லை. ஆனால் அவ்வித பாகுபாட்டால் எவ்வித பாதிப்பும் யார்க்கும் ஏற்பட்டதில்லை. ஒருவர்க்கொருவர் உறுதுணையாக, பக்கபலமாக இருந்திருக்கின்றனர் என்பது சங்கப்பாடல் வழி புலனாகிறது.

## சமூகநீதி

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற மன்னன் புலவர்க்குரிய பரிசுகளைத் தராது காலம் தாழ்த்திய போது ஔவை பாடும் பாடல் தன்மான உணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. அதுவும் சமூகநீதியாகக் கொள்ளப்பட்டது.

“அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென.

மழுவுடைக் காட்டகத் தற்றே

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே” (Puliyur kesigan, 1971)

மேலும்,

“காணாது ஈந்த இப்பொருட்கு யான்

ஓர் வாணிகப் பரிசிலேன் அல்லேன்”

ஏனப் பெருஞ்சித்திரனார், மன்னன் புலவர்களைக் காணாது வழங்கும் தன்மையைக் குற்றமாக சுட்டிப் பாடுகிறார் (Puliyur kesigan, 1971).

மேற்காட்டிய பாடல்கள் அனைத்தும் தமிழர்கள்,திராவிடர்கள் தன்மானம் மிக்கவர்கள் என்பதைச் சங்கப் பாடல்கள் தொகுக்கப் பெற்ற காலத்திலேயே உணரப் பெற்றுள்ளமை தெரிய வருகிறது. அதனைத் தற்போது மீட்டெடுப்பது பகுத்தறிவு வாதத்தால் ஏற்பட்ட எழுச்சியாகும்.

## பெண்ணுரிமை

சங்க காலத்தில் பெண்பாற்புலவர்கள் முப்பதுக்கும் மேலாக இருந்தனர் என்பதற்கான சான்றுகள் பல உள்ளன. சங்கப் பெண்கள் இசையிலும் பிற கலைகளிலும் புகழ் பெற்று விளங்கியதைச் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன. ஔவையார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் வாழ்ந்துள்ளனர். ஔவை, அதியமானுக்காகத் தூது சென்ற செய்தியையும் காண முடிகிறது. தற்போதைய திராவிட இயக்க பெண்ணுரிமை உணர்வுக்குச் சங்க இலக்கியமே வழிகாட்டியது எனலாம். பெண் கல்வியின் சிறப்பை உணர்ந்த அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது. பெண்கல்வியால் அறிவார்ந்த சமூகம் உருவாகும். பெண்கல்வி எங்கும் கிடைக்கும் போது நம் நாட்டின் வறுமை மறையும். பொருளாதாரம் ஓங்கும். வேர் வலுவானால் மரம் பலமாகும். பெண் கல்வியும் பெண்ணுரிமையும் வலுவானால் சமூகம் வலிமை பெறும் என்பது திராவிட இயக்கக் கொள்கையாகும்.

## அனைவர்க்கும் கல்வி

சங்க காலத்தில் கற்றறிந்த புலவர்கள் அவையாக தமிழ்ச்சங்கங்கள் அமைந்திருந்தன. கணியன், கூலவாணிகன், பாணன், பொருநன், புலவன் என பல பிரிவினரும் கல்வி கற்றிருந்தனர். ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழ் கற்பிக்க கபிலர் குறிஞ்சிப்பாட்டு எழுதினார் எனும் செய்தி அக்கால கல்வி முறையைக் காட்டுகிறது.

"தள்ளாப் பொருள் இயல்பின்

தண்தமிழ் ஆய்வந்திலார்

தமிழ் நிலைபெற்ற தாங்கரும் மரபின்

மகிழ்நனை மறுகின் மதுரை"

என சிறுபாணாற்றுப்படை தமிழ்ச் சங்க காலத்தில் சிறந்திருந்தமையைக் காட்டுகிறது. கல்வி பரவலாகவும், உயர் தரமானதாகவும் இருந்தது.

சங்க இலக்கியங்கள் மக்களின் அனைத்துப் பிரிவினரும் பெண்களும் முழு கல்வியறிவு பெற்று தகுதியானவர்களாக இருந்ததைக் காட்டுகிறது.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே".

என்ற பாடல் உயர்ந்தோராயினும் தாழ்ந்தோராயினும் கல்வியில் யார் சிறந்து விளங்குகின்றார்களோ அவர்களுக்கே முதலிடம் தரப்படும். பெற்ற தாயாயினும் கல்வி கற்றோனையே விரும்புவாள் என்ற கருத்து தற்காலத்து திராவிடச் சிந்தனையான அனைவர்க்கும் கல்வியை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது (Puliyur Kesigan, 1971).

## முடிவுரை

சங்க காலத் தமிழன் மீது சாதியோ, மதமோ, கடவுளோ வந்து அமர்ந்து கொள்ளவில்லை. இடைக் காலத்திலே தான் இவை நுழைந்தன. உனினும் தமிழ் மக்களின் வாழ்வியலை இவை தீர்மானிக்கவில்லை. வரலாற்றுப் போக்கில் தமிழ்ச் சமூகத்திற்குள் மட்டுமின்றி எல்லாச் சமூகத்துள்ளும் இவை நுழைந்ததை வரலாற்றில் வர்க்கங்கள் தோற்றம் கொண்டு உணரலாம். எனவே பெரியாரியல்வாதிகளாகிய நாம் இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற சமூக அறிவியல் நோக்கில் இவற்றை அணுக வேண்டும். சங்க இலக்கியம் தமிழன் வாழ்வின் தங்க இலக்கியம். பழந்தமிழ்ச் சுவடிகளில் படுத்துறங்கும் அந்த இலக்கியப் பெட்டகத்தைப், பண்பாட்டுக் கருவூலத்தை, வரலாற்றுச் சுரங்கத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுபோய் சேர்ப்பது நம் அனைவரின் கடமை. கல்வி, தன்மானம், சாதிய மறுப்பு, பொதுவுடைமை, முதலான கருத்துகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன். பகுத்தறிவு என்ற சொல் தற்கால வழக்காயினும் சிந்தனை பழங்காலந் தொட்டே இருந்து வந்திருக்கிறது என்பதற்கு மேற்கண்ட கட்டுரையிலுள்ள கருத்துக்களே சான்று.

## References

Muthukumar, R., (2010) Dravida Iyakka Varalaru - Part 1, Kizhakku Pathippagam, Chenani, India

Puliyur Kesigan, (1971) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (1997) Aganano oru, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2005) Pathitrupathu, Paari Niliyam, Chennai, India.

Puliyur Kesigan, (2018) Nattrinai, Paari Niliyam, Chennai, India.

Puliyur Kesikan, (2013) Kurunthogai Thelivurai, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License